செ.வெ.எண்: 27/2020 நாள்: 14.01.2020

# ஆரணி ஊராட்சி ஒன்றியம், முள்ளன்ரம் ஊராட்சியில் ‘அம்மா இளைஞர் விளையாட்டு திட்டம்’ மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் துவக்கி வைத்தார்...

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி ஊராட்சி ஒன்றியம், முள்ளன்ரம் ஊராட்சி மற்றும் செய்யாறு ஊராட்சி ஒன்றியம், குன்னத்தூர் ஊராட்சி ஆகிய பகுதிகளில் இன்று (14.01.2020) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் ‘அம்மா இளைஞர் விளையாட்டு திட்டம்’ மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., செய்யார் சட்டமன்ற உறுப்பினர் திரு. தூசி கே. மோகன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா, மாவட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அலுவலர் திருமதி. எல். நான்சி, அரசு அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகிகள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது ‘மக்களால் நான், மக்களுக்காக நான் என மக்களாட்சி நடத்தி மறைந்தும் மறையாமலும் நம் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி எனது உரையினை துவங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 09.07.2019 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண். 110-ன் கீழ், கிராமங்களில் உள்ள இளைஞர்களின் ஆரோக்கியம் மற்றும் மன வளத்தை மேம்படுத்தவும், கூட்டு மனப்பான்மையை உருவாக்கவும், இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கவும் மற்றும் வெளிக்கொணரவும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து 12,524 கிராம ஊராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் “அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்” செயல்படுத்தப்படும் என அறிவித்தார்கள். மேலும், இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ரூ.76.23 கோடி நிதி ஒதுக்கீடும் செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், கிளாய் ஊராட்சி விளையாட்டு மைதானத்தில் அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 13.01.2020 அன்று சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி மூலமாக துவக்கி வைத்தார்கள். அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டத்தின் கீழ், அனைத்து கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் ஆண்கள் மற்றும் பெண்களுக்காக தனித் தனியாக “அம்மா இளைஞர் விளையட்டுக் குழு” அமைக்கப்படும். மேலும், அனைத்து ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் கபடி, வாலிபால் மற்றும் கிரிக்கெட் அல்லது பூப்பந்து அல்லது இதர விளையாட்டுகள், இவற்றில் ஏதேனும் மூன்று விளையாட்டுகளுக்கு ஆடுகளங்கள் அமைத்தல், விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல், திறந்தவெளி உடற்பயிற்சி மையம் அமைத்தல் மற்றும் விளையாட்டு போட்டிகளை ஊராட்சி ஒன்றிய, மாவட்ட, மாநில அளவில் நடத்துல், போன்ற இனங்கள் செயல்படுத்தப்படும்.

இளைஞர்களிடையே தலைமைப் பண்பினை வளர்த்தல், கிராம இளைஞர்களிடம் கூட்டு மனப்பான்மையினை உருவாக்குதல், கிராமங்களில் உள்ள விளையாட்டுத் திறன்மிக்க இளைஞர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு முறையான பயிற்சி கொடுத்து அவர்களை உயர்மட்ட போட்டிகளில் சாதனை படைக்க வைத்தல் போன்றவை இத்திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும். திருவண்ணாமலை மாவட்டத்தில் ‘அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்’ இன்று (13.01.2020) ஆரணி ஊராட்சி ஒன்றியம், முள்ளன்ரம் ஊராட்சியிலும், செய்யாறு ஊராட்சி ஒன்றியம், குன்னத்தூர் ஊராட்சியிலும், கலசபாக்கம் ஊராட்சி ஒன்றியம், தென்பள்ளிப்பட்டு ஊராட்சியிலும், கீழ்பென்னாத்தூர் பேரூராட்சியிலும் துவக்கி வைக்கப்படுகிறது. இதனை தொடர்ந்து அனைத்து ஊராட்சிகளிலும் ‘அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்’ செயல்படுத்தப்படும்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலமாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் ரூ.6.69 கோடி மதிப்பீட்டில் செயற்கை ஓடுதளம், இயற்கை புல்தரை கால்பந்து மைதானம், 32 மீட்டர் உயர்கோபுர மின்விளக்கு பணிகள் சர்வதேச தரத்தில் மேற்கொள்ளப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் ரூ.3.60 கோடி மதிப்பீட்டில் பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் கட்டப்பட்டு பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது. செய்யாரில் ரூ.1.99 கோடி மதிப்பீட்டில் சிறு விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது செய்யார் சிறு விளையாட்டு அரங்கத்தில் ரூ.46.13 இலட்சம் மதிப்பீட்டில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான உடற்பயிற்சி கூடம் மற்றும் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் தளத்துடன் கூடிய கூடைப்பந்து மைதானம் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

ஜவ்வாது மலையில் புதியதாக சிறு விளையாட்டு அரங்கம் மற்றும் மாணவர்களுக்குகான விளையாட்டு விடுதியும், செய்யாறு வட்டத்தில் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதியும் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. திருவண்ணாமலை பெண்கள் விளையாட்டு விடுதியில் தங்கி பயின்று வரும் மாணவிகள் தேசிய அளவிலும், மாநில அளவிலும் பல்வேறு பதக்கங்களை பெற்று சாதனை புரிந்து வருகிறார்கள். தேசிய அளவிலான தெற்கு மண்டல தடகளம் போட்டிகளில் 2018-2019 ஆம் ஆண்டு ஒரு தங்கப் பதக்கம், 2 வெள்ளிப் பதக்கம், 2019-2020 ஆம் ஆண்டு 2 வெள்ளிப் பதக்கம் பெற்று நமது விளையாட்டு விடுதி மாணவிகள் சாதனை புரிந்துள்ளார்கள். மேலும், மாநில அளவிலான தடகளம் போட்டிகளில் 2017-2018 ஆம் ஆண்டு 2 தங்கம், 3 வெள்ளி, 1 வெண்கலம், 2018-2019 ஆம் ஆண்டு 7 தங்கம், 8 வெள்ளி, 9 வெண்கலம், 2019-2020 ஆம் ஆண்டு 13 தங்கம், 20 வெள்ளி, 18 வெண்கலம் பெற்றுள்ளார்கள்.

தேசிய அளவிலான கூடைப்பந்து போட்டிகளில் தமிழ்நாடு அணியில் 2017-2018 ஆம் ஆண்டு திருவண்ணாமலை பெண்கள் விளையாட்டு விடுதி மாணவி ஒருவர் பங்கேற்று தங்கப் பதக்கம், 2018-2019 ஆம் ஆண்டு மூன்று மாணவிகள் பங்கேற்று வெள்ளிப் பதக்கம் பெற்றுள்ளார்கள். மேலும், மாநில அளவிலான கூடைப்பந்து போட்டிகளில் 2017-2018 ஆம் ஆண்டு 12 பெண்கள் வெண்கலம் பதக்கம், 2018-2019 ஆம் ஆண்டு 36 பெண்கள் தங்கப் பதக்கம், 2019-2020 ஆம் ஆண்டு 36 பெண்கள் தங்கப் பதக்கம், 24 பெண்கள் வெள்ளிப் பதக்கம், 36 பெண்கள் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்கள். திருவண்ணாமலை பெண்கள் விளையாட்டு விடுதி மாணவிகள் கைப்பந்து, ஹாக்கி போன்ற போட்டிகளிலும் மாநில அளவில் பல்வேறு பதக்கங்களை பெற்று நமது மாவட்டத்திற்கு சிறப்பு சேர்த்து வருகிறார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசு மாணவர்களின் விளையாட்டு திறனை வெளிக்கொண்டு வருவதற்கும், ஊக்கப்படுத்துவதற்கும் பல்வேறு திட்டங்களை, உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொண்டு வருகிறது' என்றார்.

இதனை தொடர்ந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆரணி ஊராட்சி ஒன்றியம், முள்ளன்ரம் ஊராட்சியில் கைப்பந்து, கபடி, கிரிக்கெட் ஆகிய போட்டிகள் மற்றும் செய்யார் ஊராட்சி ஒன்றியம், குன்னத்தூர் ஊராட்சியில் கைப்பந்து, பூப்பந்து, கபடி ஆகிய போட்டிகளை துவக்கி வைத்தார். மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றிய அலுவகத்தில் நடைபெற்ற சிறப்பு பொங்கல் விழாவில் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**